**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC .103/2020 <br> Sessions : <br> Deposition of Witness for : PW- 6/LW-6 <br> Name : பிரவின்குமார் <br> (மருத்துவர்) <br> Father's/Husband's Name : ஆறுமுகம் <br> Nationality : Indian | Village: கும்பகோணம் <br> Age :37 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.02.2026**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

1, 3 **எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி இறந்துவிட்டார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருப்பனந்தாள் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது 17.08.2016 அன்று பகல் 11.00 மணியளவில் நான் மருத்துவமனையில் பணியில் இருந்த போது மணலூர் அக்ரஹாரத்தை சேர்ந்த ரெங்கநாதன் மகன் 41 வயது மதிக்கத்தக்க ஹரிதாஸ் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தார். அவர் சுயநினைவுடன் தான் இருந்தார். அவரை

விசாரித்தபோது மணலூரில் வைத்து 16.08.2016 அன்று இரவு 10.45 மணியளவில் தனக்கு தெரிந்த நபர் கட்டையால் கையில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு வலது கை மணிக்கட்டில் சிறிய வீக்கம் இருந்தது.

அவரை நான் வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகலுடன் கூடிய காயச்சான்று **அசாஆ 6** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு மறுநாள் காலையில்தான் மருத்துவமனைக்கு வந்தார் நேரம் சரியாக ஞாபகமில்லை. நான் சொல்லும் காயம் காயம்பட்டவர் கீழே தடுமாறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றாலும் ஒருவருக்கு உடலில் வலி இல்லாமலும் வலி இருப்பதாக கூறி சிகிச்சைக்கு வர வாய்ப்புள்ளது என்றாலும் சரிதான்.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**